பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 320 நாள்: 23.07.2026

**கோடம்பாக்கம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (23.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட காளியம்மன் கோவில் தெருவில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மேற்கு நடேசன் நகர் பகுதியில் உள்ள விருகம்பாக்கம் கால்வாய், தாய்சா பூங்கா, வார்டு-136க்குட்பட்ட பி.டி.ராஜன் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, அய்யாவு 4ஆவது தெருவில் உள்ள அம்மா உணவகம், வார்டு-138க்குட்பட்ட கங்கா பூங்கா, வார்டு-142க்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் சைதாப்பேட்டை காய்கறி அங்காடி கட்டுமானப் பணி, வார்டு-140க்குட்பட்ட கோவிந்தன் சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளையும், பூங்காவில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளையும், கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காய்கறி அங்காடி கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடித்திடவும், அம்மா உணவகத்தில் தரமான உணவினை வழங்கிடவும், தூய்மையாகப் பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**